செய்தி வெளியீடு.எண்.817 நாள்.23.09.2010

## பத்திரிக்கை செய்தி

### இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை

### மறு கலந்தாய்வு

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையின் கீழ் செயல்பட்டு வரும் அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் தனியார் சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் இளங்கலை இந்திய முறை பட்டப்படிப்புகளில் சேருவதற்கு **06.09.10** முதல் **09.09.10** முடிய நடைபெற்ற கலந்தாய்விற்கு பிறகு பல்வேறு இந்திய மருத்துவப் பிரிவுகளில் அரசு மற்றம் சுயநிதிக் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் சேராததால் காலியிடங்கள் ஏற்பட்டுள்ளன. மேற்கண்ட காலியிடங்களை நிரப்புவதற்கான மறு கலந்தாய்வு, **27–09–.2010** அன்று சென்னை106 அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில் உள்ள தேர்வுக்குழு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. **06.09.2010** முதல் **09.09.2010** முடிய நடைபெற்ற கலந்தாய்வில் கலந்து கொண்டு இந்திய முறை மருத்துவ கல்லூரிகளில் சேர்ந்தவர்கள் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் உள்ள நபர்கள் மேற்கண்ட மறு கலந்தாய்வில் கலந்து கொள்ளலாம். மறுகலந்தாய்வில் கலந்து கொள்ளும் நபர்கள் தற்சமயம் பயிலும் கல்லூரி முதல்வரிடமிருந்து உரிய சான்றிதழ் ( Bonafide Certificate) பெற்று வர வேண்டும். மேற்கண்ட நாட்களில் நடைபெற்ற கலந்தாய்வில் கலந்து கொண்டு காத்திருப்போர் பட்டியலில் உள்ள நபர்கள் ஏற்கனவே இவ்வலுவலகத்தால் தெரிவிக்கப்பட்ட அனைத்து சான்திழ்களுடனும் உரிய கட்டணத் தொகையுடனும் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு www.tnhelath.org

முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர்
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை
சென்னை 106

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9